உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

நாள் :03.09.2025

அ.சா.9 – டாக்டர்A.செந்தில்குமரன் S/o அழகுமலை

S.C. No.583/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் தற்போது, 20.12.2021 தேதியிட்ட காயம்பட்ட நபரான அ.சா.1 நதியாவுடைய விபத்து பதிவேட்டு நகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் அ.சா.ஆ.8 ஆக அசலுடன் ஒப்பிட்டு பார்த்து குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள விபரங்களை நான் தான் பதிவு செய்தேன். அதில் அ.சா.1 நதியாவிற்கு வலது நெஞ்சின் இருபக்கங்களிலும் சூட்டு கொப்புளங்கள் காணப்பட்டது. வலது காலில் முன்பக்கத்திலும், பின்பக்கத்திலும் சூட்டு கொப்புளங்கள் காணப்பட்டன. முதுகிலும் சூட்டு கொப்புளங்கள் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து, உள்நோயாளி எண்.4927 ஆக பதிவு செய்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து 20.12.2021 பிற்பகல் 3.52மணிக்கு அவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். என்னுடைய விபத்து பதிவேட்டில் 2 நபர்கள் கொதிக்கும் எண்ணெயை 20.12.2021 அன்று நதியா மீது ஊற்றிவிட்டதாக குறிப்பு எழுதியுள்ளேன். கொதிக்கும் எண்ணெயை ஊற்றினால் மேற்படி காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நதியா, அதிக வலியுடன் இருந்ததால் எந்த இடத்தில் சம்பவம் நடைபெற்றது என்பது பற்றி நான் கேட்டு தெரிந்து கொள்ளமுடியவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் தாக்கல் செய்திருக்கும் அ.சா.ஆ.8ன் படி சம்பவமானது நடந்து மருத்துவமனைக்கு வந்த போது, மதியம் 2.00 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் யார் நதியாவை மருத்துவமனைக்கு அழைத்து வந்து சேர்த்தார்கள் என்ற விபரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டில் காயம் பற்றிய நிறம், வயது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இதுதொடர்பாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். சமீபத்தில் ஒருவாரத்திற்கு முன்பு தான் காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். அ.சா.1க்கு நான் முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்தேன், முழு சிகிச்சையும் அளிக்கவில்லை. நான் முழு சிகிச்சையும் அ.சா.1க்கு அளிக்கவில்லை என்பதால் காயம் பற்றி முழு விபரத்தையும் அறுதியிட்டு கூற இயலாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.03 16:58:56 +0530

Assistant Sessions Judge

Melur